உ

கடவுள் துணை

அருணகிரிநாதர் அருளிச்செய்த

கந்தரனுபூதி.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

27

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும்; அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டுகியார்டு அளவுள்ளவிநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

கந்தரனுபூதி.

மூலமும்-உரையும்.

——(*)——

விநாயகர் காப்பு.

கலிவிருத்தம்

நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள்சண் முகனுக்கியல்சேர்
நெஞ்சொற்புனை மாலைசிறந்திடவே
பஞ்சக்கரவானை பதம்பணிவாம்.

இதன்பொருள்.

மனமாகிய கனத்தகல்லானது நெகிழ்ந்து உருக எளிதில் அருள்செய்யும் அறுமுகக்கடவுளுக்கு இலக்கணம்பொருந்திய செவ்வியசொற்களாய் அலங்கரிக்கும் பாமாலை சிறப்புடைய ஐங்கரக்கடவுளாகிய யானைமுகவிநாயகருடைய பாதங்களைப் பணிவாம் என்றவாறு.

ஆடும்பரிவேலணிசேவலெனப்
பாடும்பணியேயணியாயருள்வாய்
தேடுக்கயமாமுகனைச்செருவிற்
சாடுந்தனியானைசகோதரனே.

இ-ள். தேடப்பட்டகயமுகாசூரனை யுத்தகளத்தில் வென்ற ஒப்பற்ற விநாயகருக்குச்சகோதராகிய முருகக்கடவுளே நடனமாடுங் குதிரையாகிய மயிலெனவும், வேலாயுதமெனவும், சேவற்கொடியெனவும், பாடும் தொழிலிலே தொழிலாகத் திருவருள்செய்வாம்.

உல்லாசநிராகுல யோகவிதா
சல்லாபவினோ தனுநீயலவோ
வெல்லாமற் வென்னையிழந்தநலஞ்
சொல்லாய் முருகாசுரர்பூபதியே.

இ-ள். உல்லாசமன நிராகுலனேயோகனே சல்லாபவினோதனே யாவுநீயல்லவா வெல்லமறுபடி யென்னை யிழந்தநன்மையைச்சொல்லால் முருகக்கடவுளே தேவர் சேனாபதியே என்றவாறு உ

வானேபுனல்பார் கனன்மாருதமோ
ஞானோதயமே நளினன்மறையோ

யானோமனமோ வெனையாண்டவிடந்
தானோபொருளாவது சண்முகனே.

இ-ள். ஆறுமுகக்கடவுளே மெய்ப்பொருளாவது ஆகாயமோ பூமியோ அக்கினியோவாயுவே ஞானோத மனமோ சொல்லப்பட்ட நான்குவேதமோநாதனோ என் மனமோ என்னையாண்டவிடந்தானோ எ-று ௩

வளைபட்டகைமா தொடுமக்களெனுந்
தளைபட்டழியத் தகுமோதகுமே
கிளைபட்டெழுசூ ருரமுங்கிரியுந்
துளைபட்டுருவத் தொடுவேலவனே.

இ-ள். சுற்றத்தாருடன் பொருந்தியெழுந்துவந்த தாருகாசூரனுடையமார்பும் கிரவுஞ்சமலையும் துளைபட்டு ஊடுருவவேலாயுதத்தைவிட்ட சுப்பிரமணியக்கடவுளே வளையலையணிந்த கைகளையுடைய மனைவிமக்களென்னும் பந்தத்திலகப்பட்டு எளியேனழியத்தகுமோ
எ-று. ௪

மகமாயைகளந்திட ௫ வல்லபிரான்
முகமாறுமொழிந்து மொழிந்திலனே
யகமாடமடந்தைய ரென்றயருஞ்
சுகமாயையுணின்று தயங்குவதே.

இ-ள். மண்பொன்-பெண்-என்னுமூவகையில்வருந் தும் உலகமாயையிலே நின்றுமயங்குவதை யொழிந்து மகத்தாகிய மாயையை வேரறுத்திட வல்லகடவுளாகிய சுப்பிரமணியருடைய ஆறுமுகங்க ளுடைய துதிசெய் திலன்-என்றவாறு.

திணியானமனோ சிலைமீதுனதா
ளணியாரவிந்த மரும்புமதோ
பணியாவென வள்ளிபதம்பணியுந்
தணியாவ மோசுதயாபரனே.

இ-ள். குற்றேவற்றொழிலைக்கட்டளையிடுவாயென வள்ளிநாயகி பதங்களை வணங்கும் தணிகாசலத்தில் வி ருப்புற்றுவாழுந்தயாபரனே பலம்பொருந்தியவென்மண மென்னுங் கல்லின்மே லுன்னுடைய திருவடிகளாகிய அழகியதாமரைகள் மலருமோ-எ-று. ௬

கெடுவாய்மனனே கதிகேள்கரவா
திடுவாய்வடிவே லிறைதாணினைவாய்
சுடுவாய்நெடுமே தனைதூள்படவே
விடுவாய்விடுவாய் வினையாவையுமே.

இ-ள். மனமே நீகெட்டுப்போவாய் நற்கதியொன் று சொல்வேன் கேட்பாயாக பொருளை யொளியாது கொடுப்பாயாக வடிவேலேந்திய கடவுளுடையதாள்

களைகளைப்பாயாக நெடியவேதனைத்துள்படும்படி சுடு வாயாக தீவினையாவையும் விட்சிவிடுவாயாக-எ-று. எ

அமரும்பதிகேளகமாமெனுமிப்
பிமரங்கெடமெய்ப் பொருள்பேசியவர்
குமரன்கிரிராச குமாரிமகன்
சமரம்பொருதான வநாசகனே.

இ-ள். அகமெனும் அஞ்ஞானங்கெட மெய்ஞ்ஞானப்பொருளைப் போதித்தவனே குமரனே பர்வதராஜ புத்திரிக்குமகனே யுத்தஞ்செய்யும் அசுரர்குலநாசனே யானமரும்பதி உன்னுள்வின வியருள்வாயாக.

மட்டூர்குழன் மங்கையர்மையல்வலைப்
பட்டூசல்படும் பரிசென்றொழிவேன்
றட்டூடறவேல சைலந்தெறியு
நிட்டூரநிராகுல நிர்ப்பயனே.

இ-ள், கிரவுஞ்சமலையைத்தட்டூடுருவும்படி வேலை விட்டெறியும் நிஷ்டூரனே நிராகுலனே பயமற்றவனே வாசனை பொருந்திய கூந்தலையுடைய மாதர்கள் மயக்கவலையிற்பட்டு ஊசல்போலாடுந் தண்மையையெப்பொழு தொழிவேன் என்றவாறு கூ

கார்மாமிசைகாலன் வரித்தகலபத்
தோர்மாமிசை வந்தெதிர்ப்பாடுவாய்
தார்மாபவலாரி தலாரியெனுஞ்
சூர்மாமடியத்தொடும் வேலவனே.

இ-ள். கடப்பமாலையையுடையவனே தேவேந்திர னுலகிற்குப் பகையாகிய சூரபதுமன் மாமரமாகிமடிய வேலைவிட்டக்கடவுளே கருத்தஎருமைக்கடாவின் இயமன்வந்தால் தோகைமயிலாகிய தேர்மேல்வந்துதரிசனை தருவாயாக எ-று. ம

கூகாவெனவெனகிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள்பேசியவா
நாகாசலவேலவ நாலும்வித
தியாகாசுரலோக சிகாமணியே.

இ-ள் கூவாவென்ற சத்தத்துடனே என்சுற்றத்தாக கூடயழாதகவகையாய் எனக்குப் மெய்ஞ்ஞானப் பொருளைப் போதித்தவனே மலைகளை யுடையவனே வேலாயுதனே நாற்கவிக்குந்தியாகங் கொடுப்பவனே தேவலோகசிகாமணியே என்னைக்காப்பாயாக-எ-று.

செம்மான்மகளைத் திருடுந்திருடன்
பெம்மான்முருகன் பிறவானிறவான்

சும்மாவிருசொல்லறவென்றலுமே
யம்மாபொருளென்றுமறிந்திலனே.

இ-ள். செவ்வியமான்களாகிய வள்ளிநாயகியைத் திருடப்பட்டதிருடன் பெருமையுதிடயவன் முருகன் பிலப்பற்றவன் மௌனமாகசும்மாவிருவென் தளவில் யாதொரு பொருளேயுமறிந்திலன் இஃதாச்சியம்-எ-று.

முருகன்றனிவேன் முனிநங்குருவேன்
தருள்கொண்டறியா ரறியுந்தரமோ
வுருவன்றருளன் றுளதன்றிலதன்
றிருளன்றொளியன்றெனநின்றதுவே.

இ-ள். முருகக்கடவள் ஒப்பற்றவேலேயுடையமுனிவன் நம்முடைய குருவென்று அவருடைய திருவருளேக்கொண்டு அறியாதவர்கள் அவரையறிவார்களோ அக்கடவுள் உருவமல்ல அருவமல்ல உள்ளதல்ல இல்லதல்ல இருளல்ல ஒளியல்ல என்று நின்றது எ-று. யிரு

கைவாய்கதிர்வேன் முருகன்கழல்பெற்
றுய்வாய்மன்னே யொழிவாயொழிவாய்
மெய்யாய்விழி ஞசியொடுசெவியா
மைவாய்வழிசெல்லு மாவுளேயே.

இ-ள். மனமே ஒழுங்காகக்கிரணம் பொருந்திய வேலையுடைய முருகக்கடவுளின் திருவடிகளைப்பெற்று மெய்வாய் கண்மூக்கு செவியெனும் ஐம்பொறி வினையமாகிய வைம்புலன்களையும் ஒழித்துப் பிழைப்பாயாக எ-று. ௰௪

முருகன்குமரன்குக னென்றுமொழிக
துருகுஞ்செயறந்துணர் வென்றருள்வாய்
பொருபுங்கவரும் புவியும்பரவுங்
குருபுங்கவவெண்குணபஞ்சரனே.

இ-ள். தேவர்களும்பூமியும் வணங்குங்குருசுவாமியே எண்குணமுடையவனே முருகன் குமரன்குகன் என்றுசொல்லி உள்ளமுருகுஞ்செய்கையைத்தந்து அறிவைவென்று திருவருள்செய்வாய்-எ-று ௰௫

பேராசைஎனும்பிணியிற்பிணிபட்
டோராவினையேனுழலத்தகுமோ
வீராமுதுசூர்படவேலெறியுஞ்
சூராசுரலோகதுரந்தரனே

இ-ள். வீரனேபழமையாகிய சூரபதுமன் பிளவுபட வேலாரிதமெரிந்தசூரனே தேவலோக துரந்தரனே பெரிய ஆசை என்னும் நோயில்கட்டுப்பட்டு யாதொன்றுமறியாத வினையினேன் உழலத்தகுமோ. ௰௬

யாமோதியகல்வியு மெம்மறிவுந்
தாமேபெறவே லவர்தந்ததனாற்
பூமேன்மயலபோயற மெய்ப்புணர்வீர்
நாமேநடவீர் நடவீரினியே.

இ-ள். யாமோதின கல்வியும் எம்முடைய அறிவும் தாம்பெற்றுக்கொள்ள வேலாயுதக் கடவுள் கொடுத்தத னாலே பூமியின் மேலே மயக்க நீங்கத்தருவத்தை யுண் மையாகச்செய்ய வல்லவர்களே இனி முருகக்கடவுளை நாவிலே பாடி நடங்கள் நடவுங்கள்-எ-று. ௰எ

உதயாமறியா ருணராமரவா
விதிமாலறியா விமலன்புதல்வா
விதிகாவனகாவன காவபாயவமரா
வதிகாவல்சூர பயங்கரனே.

இ-ள். பிறந்து இறந்து அழிந்துமறந்துவாழும் தர்மன் விஷ்ணு அறியப்படாத பரமசிவன் மைந்தனே மேலானவனே அங்கமில்லாதவனே பயமில்லாதவனே அமராபதித் தலைவனே சூரர்களுக்கு பயங்கரந் தருபவனே வந்தனம் வந்தனம்-எ-று. ௰அ

வடிவுந்தனமும் மனமுங்குணமுங்
குடியுங்குலமுங் குடிபோகியவா
வடியந்தமிலா மயில்வேலரசே
மிடியன்றொருபாவி வெளிப்படினே.

இ-ள் அடியுமுடியுமில்லாத கூர்மைபொருந்தியக் கடவுளே வறுமையென்றொரு பாவி வெளிப்பட்டால் வடிவமும் தனமும் மணமும்குணமும் குடியுங்குலமும் தன்னைவிட்டுக் கொடிபோய்விடும்-எ-று. ௰௯

அரிதாகியமெய்ப் பொருளுக்கடியே
னுரிகவுபதேச முணர்த்தியவா
விரிகாரணவிக்ரம வெளிமையோர்
புரிதாரகநாக புரந்தரனே.

இ-ள். அருமையாகிய உண்மைப்பொருளுக்கு அடியேன் உரித்தாக ஞானோபதேசம் உணர்த்தியவனே விரிந்தகாரண முடையவனே பராக்கிரமனே சுப்பிரமணியனே அமராவதிக்குத்தாரகனே தேவலோகத்தைக்காப்பவனே தோத்திரம் தோத்திரம்-எ-று. ௨௰

கருதாமறவாநெறி காணவெனக்
கிருதாள்வசனந் தாயென்றிசைவாய்

வரதாமுருக்க மயில்வாகனனே
விரதாசுர சூரவிபாடனனே,

இ-ள் வரதனேமுருகனே மயில்வாகனனே விதனே சூரசங்காரனே உம்மைநினைத்து எப்பொழுது மறவாது நல்வழியைக்காண எனக்கு உம்முடைய உபய பாததாமரைகளை என்றருள் செய்வார்-எ-று ௨௧

காளைக்குமரேச னெனக்கருதித்
தாளைப்பணியத் தலமெய்தியவா
பாளைக்குழல் வள்ளிபதம்பணியும்
வேளைச்சுர பூபதிமேருதவயே.

இ-ள் கூந்தற்பனையின் பாளைக்கொம்பாகிய கூந்தலையுடைய வள்ளிநாயகி திருவடிகளைவணங்குப் சுப்பிரமணியக்கடவுளைத் தேவசேனாதிபதி மேருவைக்காளையாகிய குமேரேசக்கடவுளென்று நினைத்து திருவடிகளை வணங்க உனக்குச்செய்தவங்கள் பொருந்தினவாம் எ-று

அடியைக்குறியாத தறிமையாயினான்
முடியைக்கெடவோ முறையோமுறையோ
வடிவிக்ரமவேன் மகிபாகுறமின்
கொடியைப்புணரும் குணபூதரனே.

இ-ள் வடித்தவேலையுடைய மகிபனே குறமகளாகிய வள்ளிநாயகியைப் புணரும்குணக்குன்றவனே உம்முடைய திருவடியைக்குறியாது நானறியாமையினலே முடியக் கெடுதல் முடியாது-எ-று. ௨௫

கூர்வேல்விழிமங்கையர் கொங்கையிலே
சேர்வேனருள் சேரவுமென்னுவதோ
சூர்தேரொடுகுன்று துளைத்தநெடும்
போர்வேலரந்த பூபதியே.

இ-ள், தாருகாசூரனையும் கிரவுஞ்சமலையையும் வேரோடுதுளைத்த நெடியபோர் வேலையுடையவனே தேவேந்திரலோகாதிபதியே கூர்மையாகியவேல் போலுங்வகண்களையுடைய பெண்கள் கொங்கையிடத்துச் சேர்பனுகிய நான் உம்முடைய அருள்பெற வெண்ணுவீரோ எ-று. ௨௬

மெய்யேயென வெவ்வினைவாழ்வையுகந்
தையோடி யேனலைத்தகுமோ
கையோவயிலே கழலோமுழுதுஞ்
செய்யோய்மயிலேறிய சேவகனே.

இ-ள். பன்னிருக்கையும்வேலாயுதமும் இருதிவடியம்முற்றும் அழகுபொருந்தியவனே மயில்வாகனமே

றியசேவகனே வெவ்வினைவாழ்வை உண்மையெனமகிழ்ந்து ஐயோ அடியேனாகிய நான் அலையத்தகுமோ-எ-று.

ஆதாரமிலே னருளைப்பெறவே
நீதானொருசற் று நினைந்திலையோ
வேதாகமஞான வினோதமனோ
தீதாசுரலோக சிகாமணியே.

இ-ள். வேதாகமனே ஞானவினோதனே மனோதீதனே தேவலோகசிகாமணியே ஆதாரமில்லாதவனாகிய நான் உமது திருவருளைப்பெற நீர் சற்றாவது நினைந்திதில்லை. எ-று.

மின்னநிகர்வாழ்வை விரும்பியயா
னென்னேவிதியின் பயனிங்கிதுவோ
பொன்னேமணியே பொருளேயருளே
மன்னேமயிலேறிய வானவனே.

இ-ள். பொன்னே நவமணியே தேடரும் பொருளே திருவருளே நிலைபேருடையவனே மயிலேறியதேவனே மின்னவனே மின்னலைநிகர்த்த வாழ்வைஇச்சித்த நான் வருந்துதல் என்ன இது விதியின்பயனோ எ-று

ஆனாவமுதேயயில் வேலரசே
ஞானகரனே நவிலத்தகுமோ
யானாகியவென்னை விழுங்கிவெறுந்
தானாயநிலைநின்றது தற்பரமே

இ-ள. கெடாதவமிர்தமே கூர்மைபொருந்தியவே லேந்திய அரசனே ஞானமுடையவனே யான் வேறொன்றைத் துதிக்கத்தகுமோ என்னைவிழுங்கி வெட்டவெளியாய்த் தானாய்த்தானாய் நின்றது தற்பரம் எ-று.

இல்லேயெனுமாயையி லிட்டனைநீ
பொல்லோனறியாமை பொறுத்திலேயோ
மல்லேபுரிபன்னிரு வாகுவிலென்
சொல்லேபுனையஞ் சுடர்வேலவனே

இ-ள் மல்யுத்தஞ்செய்யும் பன்னிருதோள்களில் என் புன்சொல்லை நன் சொல்லாகத் தரிக்கும் சுடர் பொருந்திய வேலாயுதத்தையுடையவனே இல்லறமென்னும் மாயையில் என்னைவைத்தாய், நீ அற்பனாகிய என் அறியாமையை நீபொருந்ததில்லை எ-று.

செவ்வானுருவிற்றிகழ் வேலவன்ன
ளொவ்வாதனென வுணர்வித்ததுதா

னவ்வாரறிவா ரறிகின்றதலா
லெவ்வாறொருவர்க்கிசைவிப்பதுவே.

இ-ள். செவ்வானம்போலும் திருவுருவில் பிரகாசிக்கும் வேலாயுதக்கடவுள் அக்காலத்தில் பிரமனுக்குச் சிருட்டித்தொழில் ஒவ்வாதென்று தன் பிதாவின் செயலில் உபதேசித்த பிரணவமானது சிவன்தானவ்வாரறிவார் அவர் அறிகின்றதல்லாமல் அப்பிரணவத்தையெவ்வாறு ஒருவருக்குப் போதிப்பது-எ-று. ௨௰

பாழ்வாழ்வெனுமிப் படுமாயையிலே
வீழ்வாயென வென்னைவிதித்தனையே
தாழ்வானவை செய்தனதாமுளவோ
வாழ்வாயினிநீ மயில்வாகனனே.

இ-ள். மயில்வாகனக் கடவுளே பாழாகிய வாழ்வென்னும் இந்தப்படி மாயையிலே விழக்கடவாயென்று என்னை விதித்து விட்டாயே நான்தான் அவைகளை செய்தேனோ அக்குற்றங்களுளவோ இனி நீ சொல்வாயாக-எ-று. ௨௧

வலையேபதறிக் கதறித்தலையூ
டலையேபடுமா றதுவாய்விடைவோ
கொலையேபுரிவேடர் குலப்பிடிதோய்
மலையேமலை கூறிடுவாகையனே.

இ-ள். மான்பதறிக்கதறித் தலையூடுருவ அம்பெய்து அதுபட்டு விழும்படியாய் விட்டலறக் கொலைத்தொ

ழில்செய்யும் வேடர்குலப்பெண்ணைப் புணரும் மலையை க்கூறிட்ட வெற்றியையுடையவர் தோத்திரம். ௩௨

சித்தவிகுலவில்லொடு செல்வமெனும்
விந்தாடவியென்னு விடப்பெறுவேள்
மந்தாக்கினி தந்தவரோதயனே
கந்தாமுருகா கருணாகரனே.

இ-ள். கங்கைதந்த புத்திரனே கந்தனே முருகனே கருணாகரனே வியாகுலமாகிய இல்லறத்தோடு செல்வமெண்ணும் வேடிக்கைகாட்ட எப்பொழுது விடப்பெறுவேன்-எ-று. ௩௩

சிங்காரமடைந்தையர் தீநெறிபோய்
மங்காமலெனக்கு வரந்தருவாய்
சங்காரமசிகாவல சண்முகனே
கங்காநதிபால கிருபாகரனே.

இ-ள். போர்வீரனே அரசனே அறுமுகனே கங்கைபுத்திரனே கிருபாகரனே சிங்காரப்பெண்களுடைய தீயவழியுறப்போல் கெடாதிருக்க எனக்கு வரந்தருவாய்-எ-று. ௩௪

விதிகாணுமுடம்பை விடாவினையேன்
கதிகாணமலர்மழ லென்றருள்வாய்
மனுவானுவல் வள்ளியையல்லதுபின்
றுதியாவிரதாசுர பூபதியே.

இ-ள். இளம்பிறைபோலு நெற்றியையுடைய வள்ளிநாயகியையல்லது வேறொருவரைத் துதியாத வீவ

னேதேவர்பூபதியே பிரமன் சிருட்டித்த உடலைவிட்டு விடாவினையேன் நற்கதியடையமாயை போலுந்திருவ டியை யெப்பொழுதுதருவாய் எ-று. ௲௫

நாதாகுமராநம வென்றரனு
ரோதாயெனவோதிய தெப்பொருடான்
வேதாமுதல்விண்ணவர் சூடுமலர்போது
பாதாகுறகுன்ப சேகரனே

இ-ள் பிரமன்முதல்தேவர்கள் சிரசிற்சூடுமலர்போ துமடியையுடைவனே வள்ளிநாயகி சிரசிற்றரிக்கும் மு டியையுடையவனே நாதாகுமரனே நமவென்று பரமசி வனார் ஓதுவாயென்று சொல்ல ஓதப்பிரணவப்பொருள் எப்பொருள்-எ-று. ௫௬

கிரியாய்விடுவிக்ரம வேளிமையோர்
பரிவாரமெனும் பதமேவலையே
புரிவாய்மன்னே பொறையாமறிவா
லரிவாயடியோடுமக நகையையே.

இ-ள். மனமேகிரவுஞ்சமலைவாய் விடவேல்விட்ட சுப்பிரமணியக்கடவுள் தேவசேனைகளோடுவந்த திருவ டிகளைப்பற்றவில்லையே அவர்திருவடிக்கு தொண்டு செ ய்வயாக பெருமையாகிய அறிவால் அகந்தையையடி யோடும் அறிவாயாக-எ-று. ௫௭

ஆதாளியை யொன்றறியேனையறத்
தீதாளியைக்காண்டது செப்புமதோ

கூதாளகிராத குலிக்கிறைவா
வேதாளகணம்புகழ் வேலவனே.

இ-ள். கூதாளச்செடியை சிரிசிலேதரிக்கும் வேடர்களுடையமகளாகிய வள்ளிக்குநாயகனே வேதாளக்கூட்டம் புகழும்வேலாயுதகடவுளே அறிவில்லாதவனே ஒன்றும் அரியாதவனேமுற்றும் குறவாளியை ஆட்கொண்டதைச் சொல்வாயாக எ-று. ௩உ

மாவேசனனங் கொடாமாயைவிடா
மூவேதனையொன்று முடிந்திடுமோ
கோவேகுறமின் கொடிதோள்புணருந்
தேவேசிவசங்கர தேசிகனே.

இ-ள். அரசனே குறமகளாகிய வள்ளிநாயகிதோளைப்புணருந்தேவனே சிவசங்கரனே தேசிகனே முகத்தாகி எழுபிறப்புங்கெட மாயைவிடாத மண்ணாசைபெண்ணாசை பொன்னாசையென்னும் மூன்றுசையும் எப்பொழுதுமுடிவுபெருமே எ-று. ௩௬

வினையோடவிடுங்கதிர் வேன்மறனேன்
மனையோடுதியங்கி மயங்கிடவோ
சுனையோடருவித் துறைறேடுபசுந்
தினையோடிதணோடு திரிந்தனனே.

இ-ள். கனையோடு கானாற்றுத்துறையோடும் பசுமையாகியதளையோடும் தினைப்புனங்காக்கும் பரணோடும் மனைவியோடுந் தியங்கிமயங்கித் திரிந்தகடவுளே என்விதினையோ விடப்பட்ட கதிர்வேடலே மறவேன்

சாகாதெனையே சரணங்களிலே
காகாநமனார் கலசஞ்செயுநாள்
வாகாமுருகா மயில்வாகனனே
யோகாசிவஞா னோபதேசிகனே.

இ-ள். வெற்றியையுடையவனே முருகனே மயில் வாகனே யோகனே சிவஞானோபதேசிகனே யமன்கல கஞ்செய்ய சருநாளையில் சாகாமல் என்னுடைய பாதங் களிலேவைத்துக் காப்பாயாக-எ-று. சச

குறியைக்குறி யாதுகுறித்தறியு
நெறியைத்தனிவேலை நிகழ்ந்திடலுஞ்
செறிவற்றுலகோ டுரைசிந்தையுமற்
றறிவற்றறியா மையுமற்றதுவே.

இ-ள். மெய்ப்பொருட்குறியைக் குறியாது குறித் தறியப்பட்ட நெறியைஒப்பற்ற வேலைநிகழ்த்தியவள்ளி மலாயையற்று உலகற்றுச் சொல்லற்றுச் சிந்தையுமற்று அறிவற்று அறியாமையுமற்று நின்றவஸ்து எ-று.

தூசாமணியுந் துகிலும்புனைவா
னேசாமுருகா நினதன்பருளா
லாசாநிகளந் துகளாயினபின்
பேசாவனுபூதி பிறந்ததுவே

இ-ள் சாணைக் கொடாதமணிகளையும் வஸ்திரத் திரத்தையுந் தரிக்கப்பட்ட குறவள்ளிக்குநேசனே முரு கனே உந்தனன்பாகிய திருவருளினாலே மாயாபந்தங்க ளற்றனை அனுபூதிபிறந்தது என்றவாறு. சரு

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொல்லக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ௸ கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது எற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ௸ கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே டடித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்த ரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இத்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸகாகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.